

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (3.2.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள்.தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர்கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர்அ.சிவஞானம்,பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர்எச்.ஆர்.கௌஷிக், அப்போலோ மருத்துவமனை துணைத் தலைவர் டாக்டர் பிரீத்தா ரெட்டி, அப்போலோ மருத்துவமனை இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் சங்கீதா ரெட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் / சென்னை குடிநீர் வாரியத்தின் தலைவர் கே.என்.நேரு அவர்களின் தலைமையில் நேற்று (3.2.2026) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 353வது வாரியக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், சென்னை குடிநீர் வாரியத்தின் செயல் இயக்குநர் கௌரவ் குமார் மற்றும் வாரிய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## ஏரிக்கரை பூங்கா - 6 நியாய விலைக்கடைகள் திறப்பு!

# கொளத்தூரில் 248 பயனாளிகளுக்கு நல உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, பிப்.4-**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் அகரம், ஜெகநாதன் தெருவில் ரூ.11.74 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம் மற்றும் அவ்வளாகத்தில் 6 நியாய விலைக் கடைகள், கொளத்தூர், ரெட்டேரி சந்திப்பு அருகில் ரூ.4.98 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள கொளத்தூர் ஏரிக்கரை பூங்காவை திறந்து வைத்து,**

**ரூ.39 கோடி மதிப்பீட்டில் 310 திறந்தவெளி மின்மாற்றி கட்டமைப்புகளை, பாதுக்காப்பான வளைதள மின்மாற்றி களாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.02.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம் மற்றும் அவ்வளாகத்தில் 6 நியாய விலைக் கடைகள், கொளத்தூர், ரெட்டேரி சந்திப்பு அருகில் 4.98 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள கொளத்தூர் ஏரிக் கரை பூங்காவை திறந்து வைத்தார். மேலும், வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலை சந்திப்பு பகுதியில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 310 திறந்தவெளி மின்மாற்றி கட்டமைப்புகளை, பாதுக்காப்பான வளைதள மின் மாற்றி களாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம் திறப்பு**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் 11.74 கோடி ரூபாய் செலவில் தரைதளம் மற்றும் நான்கு தளங்களுடன் 21,850 சதுர அடி கட்டடப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையத்தை முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்.

இம்மையத்தின் தரைத்தளத்தில் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கரம் வாகனங்கள் நிறுத்தும் வசதிகள், வரவேற்பு அறை, மின் தூக்கி லாபி, 5 சிந்தாமணி நியாய விலைக் கடைகள் மற்றும் 1 அமுதம் நியாய விலைக் கடை என 6 நியாய விலைக் கடைகள், சாய்வுதளம், மின் தூக்கி (பயணிகள் மற்றும் ஸ்ட்ரெச்சர் வசதியுடன்) மற்றும் கழிப்பறை வசதிகள்;

**முதல் தளத்தில்** பிஸியோ தெரபி, உடற்பயிற்சி வசதிகள், எலெக்ட்ரோதெரபி அறைகள், அல்ட்ரா சவுண்ட் பிரிவு, உடற் சிகிச்சைக்கான வசதிகள், காத்திருப்பு அறை, மின்தூக்கி மற்றும் கழிப்பறை வசதிகள்;

**இரண்டாம் தளத்தில்** செயற்கை மூட்டு (கை/கால்) மையம், மின் தூக்கி மற்றும் கழிப்பறை வசதிகள்;

**மூன்றாம் தளத்தில்** டயாலிசிஸ் சிகிச்சைக்கான அத்தியாவசிய வசதிகள் மற்றும் தனிமைப் படுத்தப்பட்ட படுக்கைகள், நோயாளிகள் சிகிச்சைக்கான

15 படுக்கை வசதிகள், மின் தூக்கி மற்றும் கழிப்பறைகள்;

**நான்காம் தளத்தில்** மருத்துவ ஆலோசனை அறைகள், நோயாளிகள் காத்திருப்பு அறை, பணியாளர்கள் உடை மாற்றும் அறை, உணவு அருந்தும் இடம், மின்தூக்கி மற்றும் கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

**6 நியாய விலைக் கடைகள் திறப்பு**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 6 நியாய விலைக் கடைகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, அப்பகுதி மக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.

**கொளத்தூர் ஏரிக்கரை பூங்கா திறப்பு!**

கொளத்தூர், ரெட்டேரி சந்திப்பு அருகில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 4.98 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள கொளத்தூர் ஏரிக்கரை பூங்காவை மக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர் கள் இன்று திறந்து வைத்தார்.

இப்பூங்காவில் நடைபாதை வசதி, குழந்தைகள் விளையாடும் இடம், இசை பூங்கா, இருக்கை வசதிகள், அமரும் படிக்கட்டுகள், ஒப்பனை அறை, நவீன கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள், கண்காணிப்பு அறை, மின் அறை மற்றும் ஊஞ்சல் இருக்கைகள் போன்ற பல்வேறு வசதிகளுடன் அமைக்கப் பட்டுள்ளன.

**310 திறந்தவெளி மின்மாற்றி கட்டமைப்புகளை பாதுகாப்பான வளைதள மின்மாற்றி களாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலை சந்திப்பு, எஸ்.ஆர்.பி காலனி 8வது தெருவில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 310 திறந்தவெளி மின் மாற்றி கட்டமைப்புகளை, பாதுக்காப்பான வளைதள மின் மாற்றிகளாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கு முதலமைச்சர் அவர் கள் இன்று அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

**கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

முன்னதாக, ஜவகர் நகரில் உள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை, கல்வி உபகரண பொருட்கள், மடிக்கணினிகள், பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகை, மாவு அரவை இயந்திரங்கள், சலவை பெட்டிகள், காதொலி கருவிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை 248 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மா. சுப்பிரமணி யன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் திருப்பூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - ஆர். சக்திகுமார் 151, செம்மான்டம் பாளையம், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) க. கவிராஜ் 188, பழைய வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு, எல்லீஸ் நகர் அஞ்சல், தாராபுரம் - 636657, திருப்பூர் மாவட்டம். 2) சு. தனசீலன் 12/82, கோட்டார்பட்டி, ஆனங்கூர் அஞ்சல், சின்னதாராபுரம் வழி, மூலனூர் - 638102, திருப்பூர் மாவட்டம். 3) ஜி. விஜயகுமார் ஜோதியம்பட்டி, குண்டடம் - 638702, தாராபுரம், திருப்பூர் மாவட்டம். 4) ஒ.பி. பழனிச்சாமி 84, மேட்டூர், கன்னிவாடி, தாராபுரம் - 638106, திருப்பூர் மாவட்டம். 5) பா. சசிக்குமார் 40/18, பழைய கோட்டை, மேட்டுத் தெரு, தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம். 6) பொ. மணிவாசகம் மருத கவுண்டன் வலசு, கரையூர் அஞ்சல், தாராபுரம் - 638661, திருப்பூர் மாவட்டம். 7) வி. பிரவீன் 9/33, கரட்டுப்பாளையம், படியூர் அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-02-2026.

**தயாநிதி மாறன் எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

## தேனி வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

தேனி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ப. செல்லத்துரை அவர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **ஆ. ஜெயக்குமார்** (முத்தாலம்மன் கோவில் தெரு, புள்ளக்காபட்டி, தேவதானப்பட்டி, பெரியகுளம், தேனி - 625602) அவர்கள் தேனி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-02-2026.

**தயாநிதி மாறன் எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி



காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினத்தையொட்டி அமைதி பேரணி மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. உடன் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன். சன் பிராண்ட் ஆறுமுகம் மேயர். திருமதி மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்




தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை செயல் திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் நந்திவரம் & கூடுவாஞ்சேரி நகரச் செயலாளர் எம்.கே.டி.கார்த்திக் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகரச் செயலாளர் ஜெ.சண்முகம், ஒன்றியச் செயலாளர்கள் ஆப்பூர் சந்தானம், கே.பி.ராஜன், ஒன்றிய குழுத் தலைவர் உதயா கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் பொன்னேரி பஜார் வல்லூர் மாவட்ட கழக அலுவலகம் , ஆரணி பஜார் ஆகிய பகுதியில் உள்ள திருவுருவப்படத்திற்கு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மு. பகலவன், பா.செ.குணசேகரன், பரிமளம்விஸ்வநாதன், பி.வெங்கடாஜலபதி, ஜி.ரவிக்குமார், ஆ.சக்தியவேலு, ஆ.ராஜா, ந.செல்வசேகரன், மு.முரளிதரன், ஞாயிறு வே. ஆனந்த்குமார், பி.முத்து, ப.து.தமிழரசன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்

### அண்ணாநகர் தெற்கு பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் கு.அமரேசன் அப்பு தந்தை

## க.குப்பன் (எ) குப்புசாமி திருவுருவபடத்திறப்பு விழா!

### மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு திருவுருவ படத்தினை திறந்து வைக்கிறார்!



*சென்னை, பிப். 4-*

*அண்ணாநகர் தெற்கு பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் கு.அமரேசன் அப்பு அவர்களின் தந்தை க.குப்பன் (எ) குப்புசாமி (வயது 61) அவர்கள் 26.01.2026 புதன்கிழமை உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.*

*அவரது திருவுருவ படத்தினை இன்று (04.01.2026 - புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் பகுதி செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவர் ந.இராமலிங்கம் தலைமையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி., அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் / தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன் முன்னிலையில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு திருவுருவப்படத்தினை திறந்து வைக்கிறார்.*

*இந்நிகழ்வில் S.இராம்குமார், வி.நன்மாறன், வட்ட கழக செயலாளர்கள் ந.அதியமான், தெ.கருணாநிதி, இரா.பொன்னுரங்கம், இரா. நவிந்திரகுமார், வி.எம்.சிவா, வெ.சண்முகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ப.பிரகாஷ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.யோகேஸ்வரி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எம்.எம்.டி.ஏ. ஆ.கார்த்திக், பி.ஜெ. ஓம்குமார், பகுதி மாணவர் அணி அமைப்பாளர் க.மூ. ஸ்ரீதரன், பகுதி நிர்வாகிகள் ஏ.கே.மூர்த்தி, எஸ்.பி.குமார், ஆர். எஸ்.கில்பர்ட், பானுமதி கிருஷ்ணசாமி, வட்ட நிர்வாகிகள் ஏ.டி.ஏ.யூனிஸ்மைதீன், இ.கண்ணியப்பன், எஸ்.சபிக் ராஜா, எஸ்.ராமு, த.தீபா, ஜெ.கிரி, சு.வெற்றிசெல்வன், தி.கதிரவன், சி.அருள்மணி, கே.பி.என்.ராஜ், எஸ்.எம். மொய்தீன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்துக்கொள்கின்றனர்.*

### 141வது வட்ட கழக செயலாளர்

## லலிதாபுரம் என்.துரை மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



*சென்னை, பிப்.4-*

*சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 141வது வட்ட கழக செயலாளர் லலிதாபுரம் என்.துரை அவர்கள் நேற்று (3.2.2026 செவ்வாய்க்கிழமை) மாலை 5.30 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.*

*அன்னாரின் உடல் எண். C-5 பிளாக், லலிதாபுரத்தில் உள்ள அவரது இல்லம் தியாகராயர் நகரில் இருந்து இன்று (4.2.2026 புதன்) மாலை 4 மணியளவில் புறப்பட்டு கண்ணம்மா பேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.*




சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி தி.மு.க. சார்பில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.மதன்மோகன் எம்.சி. தலைமையில் ”தமிழ்நாடு தலை குனியாது என்னும் பரப்புரை பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக நட்சத்திரப் பேச்சாளர் எம்.எம்.அப்துல்லா சிறப்புரையாற்றினார். இதில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, தொகுதிப் பார்வையாளர் சி.எச்.சேகர், வட்டக் கழகச் செயலாளர்கள் ஜெகதீசன் எம்.சி, மகேஷ், பிரபாகரன், கோபி, சின்னராஜ், தமீம் அன்சாரி, வெங்கடேசன் மற்றும் அனைத்து நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட பகுதி, வட்ட, பாக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.